# வட ஆர்க்காடு தமிழர் மகாநாடு.

## வரவேற்புப் பிரசங்கம்.

## முற்கால தற்கால தமிழர் நிலைமை.

## ஹிந்தியால் வரும் கேடுகள்.

### தோழர் மா. லோகநாத முதலியார் விளக்கம்.

தமிழ்ப்பெரு மக்களே!

நெடுநாட்களாகப் பலவேறு வகைகளில், அரசியல், வாணிகம், சாதி, சமயம் முதலிய பல காரணங்களால் கொள்கை வேறுபட்டுச்சிதறிக்கிடந்த நாம், இன்று நம் தாய் மொழியாகிய தமிழ், அது நிலவும் தமிழகம், அதன் சிறப்புக்குரிய கலைகள், அவற்றால் உண்டாகக் கூடிய நன்மைகளைச் செய்து கொள்ளுவதற்கான அரசியல் என்ற இவைகளால் ஒரு மனப்பட்டு உழைக்கவேண்டிய சமயம் பெற்று, அதற்காக வேண்டி ஆலோசனைகளை ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**தமிழர் மகாநாட்டின் அவசியம்.**

நாம் எல்லோரும் தமிழர்; நம் முன்னோரும் தமிழர்; நம் முன்னோருக்கு முன்னோரும் தமிழர். நம்மில் பலர் பிற நாட்டவரின் உதிரக்கலப்பு உடையராக இருந்த போதிலும், நம் தமிழிலே பிறந்து, தமிழிலே வளர்ந்து, தமிழிலே நினைந்து, தமிழிலே பேசி, தமிழ் வழக்கமும ஒழுக்கமும் உடையவராய்த் தமிழராய்த் திருந்தியுமிருக்கின்றனர்.

சிலர், தமிழர் போலவே பிறந்து, தமிழர்போலவே வளர்ந்து, நினைந்து, பயின்று வந்தாலும், தமிழர் அல்லாதார் போன்ற மனவேறுபாடு கொண்டு, நம்மைக் கீழ்ப்படுத்தி இருக்கின்றனர். அவர்கள் சுமார் ஆயிரத்தி ஐந்நூறு வருஷங்களுக்கு முன்பே இந்தக் காரியத்தில் இறங்கி, நம்மைக் குரங்குகள் என்றும், ...ங்கிந்தை வாசிகள் என்றும் ...திகாசங்களில் எழுதியிருக்கின்...ர்.

இதை நமது தோழர் ஜவஹர்...ல் நேரு அவர்கள் தம் மக...க்கு எழுதிய கடிதத்தில் ...பக். 84, மூன்றாம் பதிப்பு) விளக்கமாய்க் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் செய்த அந்தச் சூழ்ச்சி வழியாகத் தோன்றிய சாதி வித்தியாசம், சமய வித்தியாசம் முதலிய வித்தியாசங்களால், பலப்பல ஜாதியினராகப் பிரிக்கப்பட்டுச் சிதறிப்போனோம்.

நம் தமிழ்க் கலைகள் பல, அறவே நாசமாய் விட்டன; நமது நாகரிகம் வட நாட்டாரிடத்திலிருந்து கடன் பெற்றதென்று கூடச் சொல்லப்படத் தொடங்கிற்று. சுருக்கமாகச் சொன்னால், தமிழராகிய நாம் வட நாட்டாரால் தான் மனிதராகப்பட்டோம் என்று சிலரால் சொல்லப்படும் நிலைமையை அடைந்து விட்டோம்.

இந்தச் சூழ்ச்சி, நம்மில் பல அறிஞர்களால் உணரப்பட்டிருந்தது. இங்கே வந்திருக்கும் தலைவர்களால் பல ஆண்டுகளாக எடுத்துக் காட்டப்பட்டும் வந்தது. நமது மனமும், அவர்கள் வஞ்சவலையில் சிக்கி, விடுபடமாட்டாமல் சென்ற சிலமாதங்கள் வரையில் விடுதலையடையாமல் மயங்கி யிருந்தது.

நம்மை இழிவாகக் கருதி வந்த ஒரு கூட்டத்தினர் அரசியலில் அதிகாரம் பெற்று தங்கள் கருத்து வெளியாகத்தக்க முறையில் நடத்தத் தொடங்கினர். நம்மவர் பலர், அறிவாளிகளாய் இருந்தும், அவர்கள் சூழ்ச்சி வலையில் அகப்பட்டுத் தங்கள் பேச்சுச் சுதந்தரங்களை இழந்து வெற்றாட்களாக நடத்தப்படுவது கண்டோம்; நம் தமிழுக்கும் இடையூறு செய்ய நினைப்பது கண்டோம்; அதனால், நாம் நம்மை உணர்ந்து ஒன்று கூடத் தொடங்கினோம்; இன்று இங்கே கூடியிருக்கின்றோம்

**நாம் ஆலோசனை செய்ய வேண்டிய விஷயங்கள்.**

இங்கே கூடியிருக்கும் நமக்குத் தாய் பாஷை தமிழ். சரித்திர காலத்துக்கு முன்னமேயே நமது தமிழ், திருத்தமாய் இருக்க பாஷையாகும். இதைத் தென்மொழி என்றும், வட நாட்டுச் சமஸ்கிருத பாஷையை வடமொழி என்றும் சொல்லுவர்.

அந்த வட மொழி இப்போது பேச்சு வழக்கத்தில் இறந்து போயிற்று. நமது தமிழ் இன்றும், அன்று இருந்ததுபோலவே இருந்து வருகிறது. தற்கால நமது தமிழையும் சாவப்பண்ணுவதற்காக ஹிந்தி என்னும ஒரு புதிய பாஷையைப் புகுத்த எண்ணி முடிவு செய்திருக்கிறது.

இந்த விஷயத்தில் முன்னே நிற்பவர், நமது தமிழர் சமூகத்தில் தோன்றிய வேற்றுமைகளுக்குக் காரணமான வட மொழிக் கொள்கைதனையும் சாதிப் பிரிவுகளையும் உண்டு பண்ணித் தமிழையும் தமிழரையும் அவமதித்து நிற்கும் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர். அவரோடிருக்கும் தமிழர்கள் அவர் அடிப்பட்டுச் சுதந்தரம் இழந்து சுயவுணர்வு இல்லாமல் உள்ள சுன்னங்கள்.

இவர்கள் ஹிந்தி மொழியால் தமிழுக்கு அபிவிருத்தி உண்டாகும் என்று சொல்லுகிறார்கள். மேற்கில் மலையாளமும், தெற்கில் சிங்களக் கலப்பும், வடமேற்கில் கன்னடமும், வடக்கில் தெலுங்கும் நெருக்க, நம் தமிழ் நெருக்குண்டிருக்கிறது.

இதன் நடுவில் இங்கிலீஷும், சமஸ்கிருதமும் கலந்து அதனை நிலைகுலக்குகின்றன. இந்த நிலையில் ஹிந்தி யென்னும் பாஷை வந்தால் நமது தமிழ் இன்னும் பலவீனப்பட்டு விடுமல்லவா? அப்படியிருக்கத் தமிழ் அபிவிருத்தியடையும் என்பது பொய்தானே?

"இதர பாடங்களைத் தமிழில் கற்பிக்க ஏற்பாடு செய்யப் போகிறோம்; அதனால் தமிழ் நன்றாய் அபிவிருத்தி யாகும்" என்கின்றார்கள். இதர பாடங்களைத் தமிழிலில் கற்பிப்பது நல்லதுதான். அதனால் நம் சிறுவர்கள் பாட விஷயங்களைச் சுலபமாய்க் கற்றுக் கொள்வார்கள்.

ஆனால், அந்தப் பாடங்கள் எல்லாம் மிகுந்தும் தக்க தமிழ்ப் பதம் இருந்தாலும் அவைகளை விட்டு சமஸ்கிருதங்களை நிரப்பியே எழுதப்பட்டிருக்கின்றன.

இப்போது இங்கிலீஷுக்குக் கஷ்டப்படுகிற சிறுவர்கள் அப்போது சமஸ்கிருதத்தால் துன்பப்படப் போகிறார்கள். இதற்கு ஒரு ஏற்பாடும் செய்வதாகத் தெரியவில்லையே! இதனால் இங்கிலீஷுக்குப் பதில் சமஸ்கிருதத்தை நுழைக்க வேண்டும் என்ற கருத்தே மந்திரி சபைக்கு இருக்கிறது என்று தெரிகிறதல்லவா?

இதர பாடங்களைத் தமிழில் சொல்லுவதின் நோக்கம், இங்கிலீஷில் படித்தறிவதைவிடத் தமிழில் சுலபமாகப் பிள்ளைகள் பாட விஷயங்களைத் தெரிந்து கொள்வார்கள் என்பதுதான். ஆகவே, இதன் முக்கிய நோக்கம் விஷயஞானத்தைப்பற்றி நிற்கிறதே தவிர, பாஷாஞானத்தைப்பற்றி இல்லையென்று நன்றாய்த் தெரிகிறது.

**கனம் ராமனாதன் எதிர்ப்பு**

பாஷாஞானமும் விஷயஞானமும் இருந்தால்தானே படிப்பு உண்டாகும். அந்தப் பாஷா ஞானத்துக்காக நமது தமிழைக் கட்டாயமாக்க வேண்டாமா? வத்தலகுண்டில் நடந்த காங்கரஸ் மகாநாட்டில் தோழர் அவனாசிலிங்கம் செட்டியார் தமிழைக் கட்டாயமாக்கவேண்டும் என்று கொண்டுவந்த தீர்மானத்தை, நமது மாகாண மந்திரி, கனம் ராமநாதன் அவர்கள் எதிர்த்து அழித்துவிட்டார்.

இவரும் ஒரு தமிழரே!

தமிழ்நாட்டில் தமிழர்க்குப் பிறந்து, தமிழில் வளர்ந்து, பயின்று வரவேண்டிய சிறுவர்களுக்குத் தமிழ் கட்டாயமில்லை என்றால் அது வெட்கமல்லவா? குறைந்தது பத்தாவது வகுப்பு வரையிலாவது தமிழ் கட்டாயப் பாடமாக வைக்கவேண்டுமல்லவா? அதையும் செய்யாமல், பள்ளிக்கூடங்களைக் குறைத்துவிட நினைப்பது நாட்டிற்குத் துரோகமல்லவா? நாட்டின் முன்னேற்றத்துக்குக் கல்விதானே பிரதானம்.

நமது தேசத்தில் பாஷாபிவிருத்தியும், சமூக ஒற்றுமையும் இல்லாமல் இருப்பதற்கு ஒவ்வொரு மாகாணத்திலும் பல பாஷைகள் இருப்பதே மூல காரணம். நமது மாகாணத்தில் தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ் என்ற நான்கு முக்கிய பாஷைகள் இருக்கின்றன.

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பதுபோல, பல பாஷைகள் இருப்பதால், இங்கிலீஷ் பொது பாஷையாய் வளம்பட ஆரம்பித்தது; மற்ற பாஷைகள் இரண்டாவதாக நிற்கலாயின.

பாஷைகளைக் காரணமாகக் கொண்டு, தெலுங்கு மாகாணம், தமிழ் மாகாணம், எனச் சில மாகாணங்களாகப் பிரித்துவிட்டால், ஒவ்வொரு மாகாணமும் தனக்குரிய பாஷை, அரசியல், சமூகம் முதலியவற்றைச் சீர் செய்து கொள்ளும்; அக்கருத்தால் தெலுங்கர்கள் தெலுங்கு மாகாணம் வேண்டுகிறார்கள். அதேபோல் நாமும் நம் தமிழ் மாகாணத்தைப் பிரித்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

நம் தமிழர் சமூகம் பலப் பல சாதிப் பிரிவுகளால் சிதறுண்டு, ஒற்றுமையின்றிக் கிடக்கிறது, "உயர்ந்த ஜாதியார்" என்ற ஒரு சிறு சமூகத்தால் சூத்திரர் என்று ஒதுக்கப்பட்டு, அவருடைய பொய் மந்திர தந்திரங்களால் தாழ்த்தப்பட்டிருக்கிறோம்.

அந்தக் கூட்டத்தின் ஆதிக்கம் மிகுந்திருப்பதால், இப்போது நம் மாகாணத்தில் ஒரு பதவிக்கு எடுத்த 26 பேர்களில் 16 பேர் அந்தச் சாதியினராகவே இருக்கின்றனர். இம்மாதிரி பல நேர்மையல்லாத காரியங்கள் நடக்கின்றன.

நமது மாகாண மந்திரிகள் நிலத்தை உழுது பிழைக்கும் விவசாயிகளுக்குத் துணை செய்வதாக ஒரு சட்டம் செய்து, மிராசுதார்களுக்கும், ஏழைகளுக்கும், ஒற்றுமையுண்டாகாமல் செய்திருக்கின்றனர்.

வரியைக் குறைக்கப்போவதாகச் சொல்லி அதைச் செய்யாமல் பத்திரம் முதலிய சாசன வகைகளுக்கும், துணியணி விற்கிறவர்களுக்கும் புதுவரி ஏற்படுத்தியிருக்கின்றனர்.

கள் குடிப்பதை நிறுத்துவதாகச் சொல்லிக் கல்விச் சாலைகளைப் புதைக்க முயலுகின்றனர். வைத்திய வசதி ஏற்படுத்தப் போவதாகச் சொல்லி, ஏழை எளியவர்கள் பொருள் கொடுத்து வைத்தியம் பண்ணிக் கொள்ளும்படியான அசௌகரியத்தைச்செய்ய நினைத்திருக்கின்றார்கள்.

இவ்வாறு, தமிழர்களாகிய நமது கல்வி, சமூகம், பொருளாதாரம், சுகாதாரம் முதலிய பல ஆதார துறைகளிலும் பல்வகையான அசௌகரியங்களை நமது மாகாணத்துப் பாஷாபிமானமும், சமூகாபிமானமும், பொருளாதார அபிமானமும் சுகாதார அபிமானமும் இல்லாத காங்கரஸ் மந்திரி சபை செய்ய நினைத்திருக்கிறது.

இவ்விஷயங்களால், மிகுந்த நெருக்கடியில் கிடக்கும் நாம் இன்று இங்கே கூடி, இனிச் செய்யவேண்டிய விஷயங்களை ஆராய்ந்து தக்க செயல் முறைகளைக் காண வேண்டும்.

இத்தகைய நெருக்கடியே நமது முஸ்லிம் சகோதரர்களுக்கும் உண்டாகியிருப்பதால் நாம் இருதிறத்தாரும் மனமொத்து நமக்கும், நமது பாஷைக்கும் சமூகத்துக்கும், பொருளாதாரத்துக்கும் அவசியமான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இதற்குத் தமிழரும் முஸ்லிம்களும் ஆகிய சகலரும், தங்களுக்குள் இருக்கும் வித்தியாசங்களை நீக்கி ஒற்றுமைப்பட வாருங்கள், ஒற்றுமைப்பட வாருங்கள் என என் மனமார உங்களை வரவேற்கின்றேன். இந்த வழியில் வேண்டிய ஆலோசனைகளைக் கூறி நம்மைச் செலுத்துவதற்காக இங்கே வந்திருக்கும் தமிழ்த் தலைவர்கள் பலரையும் இம் மகாநாட்டின் சார்பாக மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்கின்றேன்.

---

## சிற்றுண்டி விருந்து.

(ஒரு நிருபர்)

திண்டுக்கல், பிப். 28.

26-2-38ந் தேதி மாலை 5-30 மணிக்கு தோழர் எம். எஸ். பி. சோலைநாடார் அவர்கள் பங்களாவில் உயர்தரப்படிப்பிற்காக மேல்நாடு சென்று திரும்பி வந்த தோழர் கே. டி. கே. தங்கமணி (பி. ஏ. ஹானர்ஸ்) அவர்களுக்கு திண்டுக்கல் நாடார் வியாபாரிகளால் ஓர் சிற்றுண்டி விருந்து கொடுக்கப்பட்டது.